# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2231/5 - 2021 ජුනි මස 08 වැනි අඟහරුවාදා - 2021.06.08

*2231/5 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/78* (XV) (*அ*).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*21 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் இக்கட்டளை மூலம்-*

(அ) வியாபாரக் கற்கைகள், பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியற் கற்கைகள் என்பவற்றின் கற்றற் கிளைகளில் உயர்கல்வியை வழங்கும், மேம்படுத்தும் அத்துடன் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக, 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பல்கலைக்கழகமொன்றைத் தாபிக்கின்றேன் ;

(ஆ) அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு ''இலங்கை, வவுனியா பல்கலைக்கழகம்'' என்ற பெயர்மகுடத்தைக் குறித்தளிக்கின்றேன் ;

(இ) வவுனியா நிருவாக மாவட்டத்தினுள் அத்தகைய பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் இருப்பிடமாகவிருக்க வேண்டிய அமைவிடத்தைக் குறித்துரைக்கின்றேன் ;

(ஈ) தெரிவுசெய்யப்பட்ட கற்கைகளில் விசேடத்துவத்தை அபிவிருத்தி செய்யும் இயல்திறனுடன் திடமானவோர் அடிப்படையைக் கொண்ட கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் இலக்குடன் பரந்தளவிலான தொடர்புபட்ட கற்கைகளுடன் சம்பந்தப்பட்ட கற்கைநெறிகளை இப்பல்கலைக்கழகம் அபிவிருத்தி செய்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ;


1A - PG 5458 — 526 (2021/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(உ) உள்நாட்டு மூலவள அடிப்படையினுள் விழுமியத்தை உருவாக்குதல் பற்றி மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதன்மீது இப்பல்கலைக்கழகம் கூடுதலான அழுத்தத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ; அத்துடன்

(ஊ) இதற்கான அட்டவணையின் முறையே நிரல் I இலும் II இலும் தரப்பட்டுள்ள பீடங்களையும் கற்கைத் துறைகளையும் அத்தகைய பல்கலைக்கழகம் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.

**அட்டவணை**

| *நிரல் I*<br>*பீடங்கள்* | *நிரல் II*<br>*கற்கைத் துறைகள்* |
|---|---|
| வியாபார கற்கைகள் பீடம் | 1. நிதி மற்றும் கணக்கியல் துறை<br>2. ஆங்கில மொழி கற்பித்தல் துறை<br>3. கருத்திட்ட முகாமைத்துவத் துறை<br>4. மனிதவள முகாமைத்துவத் துறை<br>5. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை<br>6. வியாபாரப் பொருளியல் துறை<br>7. முகாமைத்துவ மற்றும் தொழில் உரிமையாண்மைத் துறை |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 1. பௌதிக விஞ்ஞானத் துறை<br>2. உயிரியல் விஞ்ஞானத் துறை |
| தொழில்நுட்பவியல் கற்கைகள் பீடம் | 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, யூன் 04.*

*06-249/1*

---

*ச. வ. பி. 21/78* (XV) (*அ*).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், "இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்" எந்தக் கட்டளையின் மூலம் தாபிக்கப்பட்டதோ மேற்கூறப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டு மாச்சுக மாதம் 26 ஆந் திகதிய 968/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அந்தக் கட்டளையை 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இத்தால் இல்லாதொழிக்கின்றேன்.*

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, யூன் 04.*

*06-249/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.